Registerd as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆனி 10 | [24-06-93] | வியாழக்கிழமை | ஓசை 126

## இந்திய இராணுவத்தின் ஷெல்லை பரீட்சித்த சிறுவன் பலி

கடந்த 6 வருடங்களாக வெடிக்காமல் இருந்த எறி கணையொன்றை கல்லில் எறிந்து பரீட்சித்துப்பார்த்த சிறுவன்ஒருவன்மரணமடைந்த சம்பவமொன்று நேற்று மாலை 5.15 மணியளவில் கோண்டாவிலில் நடைபெற்றது. இச்சம்பவம் பற்றிதெரியவருவதாவது, 87-ம் ஆண்டளவில் இந்திய இராணுவத்தினரால் ஏவப்பட்ட எறிகணையொன்று வெடிக்காத நிலையில் கோண்டாவில் சொரூபன் வீதியிலுள்ள கனகரத்தினம் என்பவர் வீட்டில் வீழ்ந்திருந்தது. இது பற்றி, இந்திய இராணுவத்தினரிடம் தெரிவித்த சமயம், அது ஆபத்தில்லாதது என அவர்கள் கூறியிருந்தனர். கவனிப்பாரற்று கிடந்த இவ் எறிகணையை குரும்பசிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து மேற்படி வீட்டினருகில் வசித்துவரும் குடும்பத்தை சேர்ந்த சிறுவர்கள் நேற்றுமாலை விளையாடும்போது கண்டெடுத்தனர். இதையடுத்துஇச்சம்பவத்தில் படுகாயமடைந்த கந்தசாமி சஞ்சீவன்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பெற்றோல், டீசல், சீமெந்து, யூரியா உடன் யாழ். அனுப்பிவைக்க முடிவு

## தரை, கடல் மார்க்கமாக பொருள்கள் எடுத்து வரப்படும்

(யாழ்ப்பாணம்)

போர்க்கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து தடை நீக்கம் செய்யப்பட்ட பொருள்களின் ஒருதொகுதியை உடன் யாழ்ப்பாணம் அனுப்பிவைப்பதென கொழும்பில் நேற்று நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி பெற்றோல், டீசல், ஒயில், சீமெந்து, யூரியா உட்பட மேலும் பல பொருள்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளன. இப்பொருள்கள் தரைமார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இப்பொருள்கள் முதற்கட்டமாகக் கப்பல்மூலம் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவுள்ளன.

கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் இரண்டு கப்பல்களிலும் குடாநாட்டுக்கு எடுத்துவரப்படவிருக்கும் பொருள்கள் நேற்றுமுதல் ஏற்றப்பட்டு வருகின்றன.

500 பீப்பா டீசல், 100 பீப்பா எஞ்சின் ஒயில், 1,500 பீப்பா மண்ணெண்ணெய், 500 ஒரு லீற்றர் பைக்கெற் பிறேக் ஒயில், 200 பீப்பா தேங்காயெண்ணெய், சீமெந்து 500 பைக்கெற், 1000 பைக்கற் யூரியா உரம் ஆகியவை இக் கப்பல்களில் ஏற்றப்பட்டு வருகிறது.

இந்த 500 பைக்கற் சீமெந்து அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருள்கள் ஏற்றப்பட்டதும் வடபகுதி நோக்கிப் புறப்படும். இக்கப்பல்கள் எதிர்வரும் 27ஆம் திகதியளவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [க]

## 500 பரல் பெற்றோல் கிளிநொச்சி வந்துசேரும்

(கொழும்பு)

வடபகுதிக்கு முதற்கட்டமாக 500 பீப்பா பெற்றோல் தரைமார்க்கம் கிளிநொச்சிக்கு எடுத்துவரப்படவுள்ளது.

கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு பெற்றோல் எடுத்துவருவதற்கு ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டது ஆனால் கப்

தரைமார்க்கமாக பெற்றோல் எடுத்துச் செல்வதற்கு முடிவெடுக்கப்பட்டு முதற்கட்டமாக மேற்படி அளவிலான பெற்றோல் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்படுகிறது. (க)

## தேவையான அளவில்

## துப்பாக்கிசூடு

தெல்லிப்பழை பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று காலை 8 மணியளவில் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் வயோதிபர்ஒருவர் காயமடைந்தார்.

## 'மத்ரண' இன்றுபுறப்படும்

பருத்தித்துறைஇறங்குதுறையில் தரித்து நிற்கும் 'மத்ரண' கப்பல் எண்ணெய் பரல்களை இறக்கி முடித்து விட்டு இன்று புறப்படும். ஓரிரு தினங்களில் 'குமண' கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் முடிவடையும். (யோ)

## புலிகள் ராஜதந்திரத்திற்கு கிடைத்த மற்றுமொருவெற்றி

(கொழும்பு)

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை அரசுடன் நடத்திய பேச்சு மூலம் விடுதலைப் புலிகள் நீக்கச் செய்துள்ளமை மீண்டும் தமது பேச்சுவார்த்தை நுட்பத்தை புலிகள் வெளிப்படுததியுள்ளதையே காட்டுகிறது. இவ்வாறு கொழும்பில் மூத்த இராணுவ அதிகாரிகள் கருதுவதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவந்த அரசின் தூதுவர் மூலம் புலிகள் அரசு மீது அழுத்தம் கொடுத்தமை புலிகளின் கை ஓங்கியிருப்பதையே காட்டுவதாகவும் புலிகளின் ராஜதந்திர அரசியல் நடவடிக்கைக்கு அரசாங்கம் பணியவேண்டி ஏற்பட்டது எனவும் மேலும் அவ் அதிகாரிகள் தெரிவித்ததாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சிறிலங்கா அரசு தடைசெய்யப்பட்ட அத்தியாவசியப் பொருள்களின் மீதான தடையை நீக்கியமை தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த மற்றொரு வெற்றி என கொழும்பில் அரசியல் அவதானிகள்கருதுவதாக ஜேர்மன் வானொலி நேற்று செய்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - அரசின் இன்றைய இணக்கம் நிரந்தர சமாதானத்திற்கு அத்திவாரமாக வேண்டும்

**- பிரிகேடியர் வீரசேகரா**

(வடமராட்சி)

யுத்தக் கைதிகள் விடுவிப்பு விவகாரத்துடன் ஏற்பட்ட சமாதான இணக்கம் நிரந்தர சமாதானத்துக்கான அத்தி

டும் என நான் விரும்புகிறேன்.

இவ்வாறு அவசரமாகக் கொழும்புக்கு நேற்றுப் புறப்

விசேட தூதுவர் பருத்தித்துறை இறங்குதுறையில் நேற்றுக்காலை 7.30 மணியள

வெளிப்படுத்தியுள்ளதை காட்டுகிறது. இவ்வாறு கொழும்பில் மூத்த இராணுவ அதிகாரிகள் கருதுவதாக வெரித்தாஸ் வானொலி தெரி

திர அரசியல் நடவடிக்கைக்கு அரசாங்கம் பணியவேண்டி ஏற்பட்டது எனவும் மேலும் அவ் அதிகாரிகள் தெரிவித்த

தாளிகள் கருதுவதாக ஜேர்மன் வானொலி நேற்று செய்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

எனவும் ... கொழும்புத் துறைமுகத்தில் ... பொருள்கள் நேற்றுமுதல் ஏற்றப்பட்டு வருகின்றன. ... பிறேக் ஒயில், 200 பீப்பா ... கிறது.

இந்த 500 பைக்கற் சீமெந்து அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருள்கள் ஏற்றப்பட்டதும் வடபகுதி நோக்கிப் புறப்படும். இக்கப்பல்கள் எதிர்வரும் 27ஆம் திகதியளவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [க]

### புலிகள் - அரசின் இன்றைய இணக்கம்

# நிரந்தர சமாதானத்திற்கு அத்திவாரமாக வேண்டும்

### - பிரிகேடியர் வீரசேகரா

(வடமராட்சி)

யுத்தக் கைதிகள் விடுவிப்பு விவகாரத்துடன் ஏற்பட்ட சமாதான இணக்கம் நிரந்தர சமாதானத்துக்கான அத்திவாரக் கல்லாக அமையவேண்டும் என நான் விரும்புகிறேன்.

இவ்வாறு அவசரமாகக் கொழும்புக்கு நேற்றுப் புறப்பட்ட சிறிலங்கா அரசின் விசேட தூதுவர் பருத்தித்துறை இறங்குதுறையில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் வடமராட்சிச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

யுத்தக் கைதிகளை விடுவிப்பதிலும், தடை நீக்கம்செய்யப்பட்ட பொருள்களை யாழ். குடாவுக்கு அனுப்பிவைப்பதிலும் எனது முயற்சி தொடரும் தடை நீக்கம் செய்யப்பட்ட பொருள்களை விரைவில் அனுப்பி வைக்கவே கொழும்புக்குப் புறப்படுகிறேன் என்றார்.

அவரை ஏற்றிச் செல்வதற்காகப் பருத்தித்துறை இறங்குதுறையில் தரித்து நின்ற 'நரோமா' கப்பல் மூலம் காங்கேசன்துறை சென்ற அவர் பின்னர் பலாலியிலிருந்து காலை 9 மணியளவில் விசேட விமானம் மூலம் கொழும்புக்குப் புறப்பட்டார். (யோ)

## போக்குவரத்து பிரச்சினை தீர்க்க முயற்சிப்பேன்

''வடபகுதி மக்களின் இடர்களை நான் நேரில் பார்த்துள்ளேன். இன்று கொழும்பு செல்லும் நான் இவற்றை போக்குவதற்கு என்னாலான முயற்சிகளை மேற்கொள்ளுவேன்'' என சிறிலங்கா அரசின விசேட தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா நேற்று தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ''முக்கியமாக வடபகுதி மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையை நான் தெளிவாக உணர்ந்துள்ளேன். இப்பிரச்சினை குறித்து ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவிற்கு எடுத்துக்கூறி நலல தீர்வுடன் மீண்டும் இங்கு வரவே விரும்புகிறேன். எனது அடுத்தவருகை கைதிகளின் விடுதலையுடன் சம்பந்தப்பட்டதாக மட்டும் இராது. இங்குள்ள மக்களின் துன்பங்களை தீர்க்கும் நடவடிக்கையாகவே பெரும்பாலும் இருக்கும்'' என்றார்.

## வவுனியா காவல் பணிமனை திறப்புவிழா



கடந்த 16-ம் திகதி இடம்பெற்ற வவுனியா காவல் பணிமனைத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன், வன்னி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. மனோ, வன்னி மாவட்டத் தளபதி திரு. கபிலன் [யூட்], வவுனியா கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவி ஆகியோரை படத்தில் காணலாம்.

# 500 பரல் பெற்றோல் கிளிநொச்சி வந்துசேரும்

(கொழும்பு)

வடபகுதிக்கு முதற்கட்டமாக 500 பீப்பா பெற்றோல் தரைமார்க்கம் கிளிநொச்சிக்கு எடுத்துவரப்படவுள்ளது.

கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு பெற்றோல் எடுத்துவருவதற்கு ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டது ஆனால் கப்பல் மூலம் பெற்றோல்எடுத்துச் செல்வதில் சில நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதால் இத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து தரைமார்க்கமாக பெற்றோல் எடுத்துச் செல்வதற்கு முடிவெடுக்கப்பட்டு முதற்கட்டமாக மேற்படி அளவிலான பெற்றோல் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்படுகிறது. (க)

## பற்றறி எருத்துவர அனுமதி

(கொழும்பு)

வடபகுதியினுள் ஒருவர் தலா இரு பற்றறிகள் கொண்டுவர வவுனியா தடை முகாம் இராணுவத்தினர் நேற்று அனுமதித்ததாக பி.பி.ஸி. செய்தியாளர் குறிப்பிட்டார்.

# தேவையான அளவில் மருந்துகள், சைக்கிள்கள்

(கொழும்பு)

வடபகுதிக்குத் தேவையான அளவு மருந்துப் பொருள்கள், மற்றும் துவிச்சக்கர வண்டிகளை தனியார் வியாபாரிகள் கொண்டுவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனியார்துறையினர், கூட்டுறவுச் சங்கங்கள் என்பன இவற்றைக் கொள்வனவு செய்து கப்பல் மூலமாகவோ, வவுனியா ஊடாக தரைமார்க்கமாகவோ கொண்டுவர எதுவித தடையும் இருக்காது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்றுக்காலை இடம்பெற்ற மாநாட்டில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில் யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகரும் கலந்துகொண்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### தடை நீக்கப்பட்ட பொருள்கள்

## வவுனியா தடைமுகாமினூடு நேற்று முதல் அனுமதி

(வவுனியா)

தடை நீக்கப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு எடுத்துவர நேற்று முதல வவுனியா தடைமுகாமினூடாக அனுமதி வழங்கபபடுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிககின்றன.

மேலும் தடைநீக்கப்பட்ட இப் பொருள்கள் நேற்று வவுனியா நகர வியாபார நிலையங்களிலிருந்து பெருமளவில் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

சைக்கிள் மற்றும் உதிரிப்பாக விற்பனையில் நேற்று பெரியதொரு சாதனை ஏற்பட்டதாக அங்குள்ள வியாபாரிகள் தெரிவித்தனர்.

## வெள்ளியன்று கப்பல் யாழ். புறப்படும்

(கொழும்பு)

சிறிலங்கா அரசினால் தடை நீக்கப்பட்ட பல பொருள்களை ஏற்றிக் கொண்டு கொழும்பு துறைமுகத்திலிருந்து நாளை வெள்ளிக்கிழமை கப்பல்கள் புறப்படும் என சிறிலங்கா வானொலி தெரிவித்தது. இக் கப்பல்கள் ஞாயிறன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தடை நீக்கப்பட்ட பொருள்களுடன் செல்லும் கப்பல்கள் பருத்தித்துறையை வாரஇறுதியில் சென்றடைந்ததும் விடுதலைப் புலிகள் வசமுள்ள எஞ்சிய பொலிசாரும் ஓர் இராணுவ சிப்பாயும் விடுவிக்கப்படுவர் என கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தடைநீங்கிய பொருள்களின் தேவை அளவுப் பட்டியல்

### இன்று தயாரிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தடைநீக்கப்பட்ட பொருள்களின் தேவைப்படும் அளவுப் பட்டியலொன்று இன்று தயாரிக்கப்படவுள்ளது.

பொருளாதாரத்தடை ஏற்படுவதற்கு முன்பு திணைக்களங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் பிரதேச செயலகங்களால் ஒருமாதத்திற்கு பாவிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்களின் அளவை உடனடியாக தரும்படி நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபரினால் கேட்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் பணிப்புரைக்கமைய நடத்தப்பட்ட இந்த அவசர மாநாட்டில் சகல திணைக்கள, கூட்டுத்தாபன, கூட்டுறவு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அத்தியாவசியப் பொருள்களான பெற்றோல், டீசல், இயந்திர ஒயில், பிறேக்ஒயில் மண்ணெண்ணெய் மற்றும் தேவையான தடைநீக்கப்பட்ட பொருள்களின் மாதமொன்றுக்கு தேவையான அளவை உடனடியாகத் தருமாறு சகல திணைக்கள தலைமையகங்களையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பிரதேச செயலகங்களுக்கு நேற்று யாழ். செயலகத்தில் நடை

(4ஆம் பக்கம் பார்க்க)

### பொருள்கள் மீதான தடை நீக்கம்

## ராணுவ அதிகாரிகளிடையே கருத்து வேற்றுமை

(கொழும்பு)

கைதிகள் விடுவிப்பு தொடர்பாக அரசாங்கம் நடந்து கொண்ட முறை குறித்து இராணுவ அதிகாரிகள் பலர் அதிர்ச்சி அடைந்துள்ளதாகவும் சில பொருள்களின் தடை நீக்கப்பட்டமை குறித்து அதிகாரிகள் மட்டத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து விளக்கமளிக்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஹோட்டல் ஞானம்ஸ்

புதிய மெருகுடன் உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் தங்குவதற்கும், தரமான சுவையான உணவுபார்சல்கள், (முன் கூட்டியே ஓடருக்கும்) மற்றும் குளிர்பானம், மதுபானம் அருந்துவதற்கும் திருமண வைபவங்கள், விருந்துபசாரங்கள் எதுவானாலும் உங்களை வரவேற்கின்றது- ஹோட்டல் ஞானம்ஸ் (சி/6877)

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஒட்டோமற்றிக், வைன்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (சி-6733)

### தவறி விட்டது

20-06-1993 இல் கிளாலித் துறையில் முக்கிய பொருள்கள் அடங்கிய புகைநிற பொதி ஒன்று காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5199)


### விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை 2 00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறும்.

திரு. சுந்தரம் சோதிலிங்கம் அவர்கள் (முகாமையாளர் ஹற்றன் தேசிய வங்கி யாழ்ப்பாணம்) பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுகிறார். திரு சி வேலாயுதம் அவர்கள் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் யாழ் கல்விக் கோட்டம்) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளுகிறார். திரு. வெ. இளங்குமரன் அவர்கள் (தலைவர் தமிழீழக் கல்விக் கழகம்) தேசியக் கொடியை ஏற்றி வைப்பார். (42)


## காணவில்லை

சித்தன்கேணி சிவன்கோவிலடியைச்சேர்ந்த பாலசுப்பி


# சகாக்கள் தாக்கப்பட்டனர் அநுரா பலத்த கண்டனம்

தமது இரு நெருங்கிய சகாக்களான மகிந்த ராஜபக்ச, ஹேமகுமார நாணயக்கார ஆகியோரை சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் கடந்த வாரம் காலியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றைத் தொடர்ந்து கோஷ்டி ஒன்று தாக்கியதை கடுமையாக ஆட்சேபித்துள்ளார் அநுரா பண்டாரநாயக்கா.

இது குறித்து அவர் தமது தாயார் சிறிமாவோவிற்கு எழுதிய கடிதம் ஒன்றில் பொதுக்கூட்டத்தில் அரசியல் எதிரிகளை தாக்காது கட்சியினருக்குள்ளேயே மோதிக்கொள்வது கட்சிக்கு நல்லதல்ல என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த புதன் காலியில் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சுதந்திரக் கட்சியும், காமினி திஸ்ஸநாயக்காவின் தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தின.

கூட்டம் முடிந்ததும் சனக்கூட்டத்திலிருந்து வந்த கும்பல் ஒன்று நாணயக்காரவையும் ராஜபக்சவையும் இளநீர் கோம்பைகளினால் தாக்கியதாம்.

## வருடாந்த அணிவகுப்பு

பரியோவான் முதலுதவிச் சங்க வடமாகாணத்தின் நிர்வாகத் தினமும், வருடாந்த அணிவகுப்பு விழாவும் இன்று மாலை 3.00 மணிக்கு யா-கொக்குவில் இந்துக்கல்லூரியில் திரு. நா. போஜன், மாகாண ஆணையாளர் தலைமையில் நடைபெறும்.

துணை அரசியற் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த வலி வடக்கு, கிழக்குப் பிரதேசம், தென்மராட்சிப் பிரதேசம், வடமராட்சிப் பிரதேசம், யாழ்-நல்லூர்ப் பிரதேசம் தீவகப் பிரதேசம் வலி மேற்கு, தெற்கு, தென்மேற்குப் பிரதேசம் என்பன கலந்துகொள்கின்றன.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரம்தசங்களும் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### கண்டெடுப்பு

கோவில் குடியிருப்புப்பகுதி கிராமசேவகர் ஆர். செல்வராஜா என்பவருக்குச் சொந்தமான ஆடபதிவுத் திணைக்கள விண்ணப்பப்படிவங்கள் சில அடங்கிய பொதி ஒன்று வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

### மணிவாசகர் குருபூசை

கோண்டாவில் கிழக்கு சிறி அற்புதநர்த்தனவிநாயகர் ஆலயத்தில் இன்று மணிவாசகர் குருபூசை கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் விசேட அபிஷேகம், திருவாசகம் முற்றும் ஓதுதல், அன்னதானம் ஆகியன நடைபெறும்.

## அதிபர் இன்றி பாடசாலை

(தென்மராட்சி)

தென்மராட்சி பகுதியில் உள்ள யா/கொடிகாமம் றோமன் கத்தோலிக்க பாடசாலை கடந்த 8 மாதங்களாக அதிபர் இல்லாமல் இயங்கி வருகின்றது.

இது சம்பந்தமாக கல்வி அதிகாரிகள் யாதும் ஒரு நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என அறியபப்படுகிறது. (86)

## பாஸ்கரலிங்கத்தை வைத்து நிர்வாக சீராக்கல்முடியாது

நான் இனவாதியல்ல; எனினும் பாஸ்கரலிங்கம், சண்முகலிங்கம் ஆகிய இருவரையும் வைத்துக் கொண்டு நிதி நிர்வாகத்தை சீராக்க முடியாது என சுதந்திரக்கட்சி பிரதம கொறடா ரிச்சர்ட் பத்திரான பாராளுமன்றத்தில் மொத்த விறபனை வரவு வரி மீதான விவாதத்தில் கலநது கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னமும் உயர்பதவியில் இருப்பதாகவும் அவர் மேலும தெரிவிததார்.

## ஆயுர்வேத ஊழியர் சம்பளம் எங்கே?

(யாழ்ப்பாணம்)

கைதடி சித்த ஆயுர்வேத போதனா வைத்திய சாலை ஊழியர்களுக்கு சென்ற தை மாதத்தில் இருந்து வைகாசி மாதம் வரைக்குமான சம்பளம் ஏதும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை என தெரிவிக்கப் பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்படி வைத்தியசாலையில் கடமையாற்றும் சுமார் 32 ஊழியர்களும் மிகுந்த கஷ்ட நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் மேற்படி வைத்தியசாலை அலுவலர் ஒருவர் கொழும்பு சென்ற சமயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தங்களுடைய சம்பளம் பற்றி கேட்டபோது அவ் அதிகாரியினால் அவர்களுடைய சம்பளங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு அதற்கான அத்தாட்சியாக தபாலகத்தினால் வழங்கப்பட்ட சிட்டை காண்பிக்கப்பட்டதாம். பின்னர் மேற்படி அலுவலர் இம்மாதத்திற்கான ஊழியர்களின் சம்பளத்தினை எடுத்துக்கொண்டு இங்கு திரும்பிவிட்டார் என மேற்படி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனைத் தொடர்ந்து மேற்படி ஊழியர்களின் சம்பளத்திற்கு என்ன நடந்தது என்பது மர்மமாகவே உள்ளது. (யா)

## சிரேஷ்ட மருந்தாளரை இடமாற்ற கோரிக்கை


[கொழும்பு]

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் சிரேஷ்ட மருந்தாளரை இடமாற்றம் செய்யும்படி அந்த ஆஸ்பத்திரியில் பணியாற்றும் மருந்தாளர்கள் கோரியுள்ளனர்.

சிரேஷ்ட மருந்தாளர், மருந்துகளை வழங்குவதில் ஒழுங்கீனமாகவும், பொறுப்பற்ற விதத்திலும் நடந்து கொண்ஏர் என்று மருந்தாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அவரின் நடவடிக்கைகள் பல நோயாளரின் மரணத்துக்குக் காரணமாயிருந்ததாகவும், அவரை இடமாற்றம் செய்யத் தவறினால் தாம் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப் போவதாகவும் மருந்தாளர் சங்கம் சுகாதார அமைச்சுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.


UNIKCO COMPUTER CENTRE



★ BASIC ★ PASCAL ★ d BASE III PLUS
★ LOTUS 1-2-3 ★ WORD PROCESSING
(Word Star Rel 5-5)

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
26-6-93 (சனி, ஞாயிறு) 28-6-93 (திங்கள், புதன், வெள்ளி)

மேலதிக விபரங்கட்கு!
37, CLOCK TOWER ROAD, JAFFNA
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை) (சி-6876)





## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 – 06 – 1936



இறப்பு 24 – 06 – 1992

### மகேஸ்வரியம்மா சிவாலிங்கம்

ஏகாந்தமாம் இம்மாலையில் எனப் பாடியநீங்கள் - அதே
ஏகாந்தவேளையில் எமைவிட்டுச் சென்றதெங்கே - அம்மா
நீங்கள் சென்று ஓர் ஆண்டு ஆனதே.........
நீங்கள் பொழிந்த பாசத்தை எண்ணி.........
எம்விழி நாளெல்லாம் நனைகிறதே அம்மா ......

உங்கள் பிரிவால் வாடும்
கணவன், பிள்ளைகள், உறவினர்.

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை 2 00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறும்.

திரு. சுந்தரம் சோதிலிங்கம் அவர்கள் (முகாமையாளர் ஹற்றன் தேசிய வங்கி யாழ்ப்பாணம்) பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுகிறார். திரு சி வேலாயுதம் அவர்கள் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் யாழ் கல்விக் கோட்டம்) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளுகிறார். திரு. வெ. இளங்குமரன் அவர்கள் (தலைவர் தமிழீழக் கல்விக் கழகம்) தேசியக் கொடியை ஏற்றி வைப்பார். (42)

கோவில் குடியிருப்புப் பகுதி கிராமசேவகர் ஆர். செல்வராஜா என்பவருக்குச் சொந்தமான ஆடபதிவுத் திணைக்கள விண்ணப்பப்படிவங்கள் சில அடங்கிய பொதி ஒன்று வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## மணிவாசகர் குருபூசை

கோண்டாவில் கிழக்கு சிறி அற்புதநர்த்தனவிநாயகர் ஆலயத்தில் இன்று மணிவாசகர் குருபூசை கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் விசேட அபிஷேகம், திருவாசகம் முற்றும் ஓதுதல், அன்னதானம் ஆகியன நடைபெறும்.

## காணவில்லை

சித்தன்கேணி சிவன்கோவிலடியைச்சேர்ந்த பாலசுப்பிரமணியம் உதஜேந்திரன் 2-6-93இல் இருந்து பிரிந்து சென்றுவிட்டீர். பிரிவு தாங்க முடியவில்லை. எங்கு இருந்தாலும் உடன் வரவும்.

அப்பா, அம்மா, சகோதரர்கள்.

(5197)

## 1-ம் ஆண்டு நினைவுநாள்



| அன்னை மடியில்: | கட்டைக் காட்டில்: |
|---|---|
| 1969 — 12 — 30 | 1992 — 07 — 04 |

## வீரவேங்கை இளம்பிறை

(சின்னத்தம்பி விக்கினேஸ்வரமூர்த்தி)

முகாவில் - இயக்கச்சி

திதி: 24. 06. 1993

கட்டைக்காட்டினில் களம் புகுந்த வேங்கையே
அன்னையின் மண்ணில் சங்கமமானாய்
மண்ணிற்கு வித்தான மாவீரர் வரிசையிலே
ஓராண்டு சென்றதடா
விண்ணுலகத்தில் உனைக்காண துடிக்கின்றோம்
விண்ணிலே பாதையில்லை உன்னைத்தொடர
ஏணியில்லை


24. 06. 93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் நினைவு நாளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:
மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

(5198)

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை) (சி-6876)




(சி6005)



| | |
|---|---|
| 06 — 1986 | 06 — 1992 |

## மகேஸ்வரியம்மா சிவலிங்கம்

ஏகாந்தமாம் இம்மாலையில் எனப் பாடியநீங்கள் - அதே
ஏகாந்தவேளையில் எமைவிட்டுச் சென்றதெங்கே - அம்மா
நீங்கள் சென்று ஓர் ஆண்டு ஆனதே.........
நீங்கள் பொழிந்த பாசத்தை எண்ணி.........
எம்விழி நாளெல்லாம் நனைகிறதே அம்மா ......

உங்கள் பிரிவால் வாடும்
கணவன், பிள்ளைகள், உறவினர்.

(5159)

## நினைவு கூருகின்றோம் ... 1993-06-24

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - கிரான்குளம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

அம்மாச்சி (முத்துக்குட்டி செல்லத்துரை - கிரான்குளம்- மட்டு)

இதே தினம் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ் வயோதிபப் பெண்.

1988ஆம் ஆண்டு மட்டு - ஊறணிப் பகுதியில் தேசவிரோதசக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

உதயன் (ச. இன்பராஜ் - மாமாங்கன் - மட்டு)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி - திருநகர்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய-

லெப். டானியல் (அந்தோனிப்பிள்ளை இரத்தினகோபால் - கனகராயன்குளம், புளியங்குளம் - வவுனியா)

யாழ் - சுன்னாகம் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்,

இராமநாதன் கணேஸ்குமார் (---)

1990ஆம் ஆண்டு யாழ் - பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

பூதீஸ் (கருஷ்ணபவ... ஜெசநாதன் - "செல்வம் இல்லம்", காந்தியூர், மாலிசந்தி, புலோலி பருத்தித்துறை - யாழ்)

கிளிநொச்சி - பரந்தனில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6884)

### சிந்தனைக்கு

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் ; நாடு.

—ஔவையார்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-06-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2339 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## பிச்சை எடுப்பதிலும் பெருமைப்படும் சிறிலங்கா

"உலகில் உயர்ந்தளவு பிச்சை பெறுபவர்கள் நாங்களே" என்பதில் பெருமை ஏதாவது இருக்குமானால், அப்பெருமை இன்று சிறிலங்கா அரசாங்கத்திற்கும், அதன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்குமே உரித்துடையதாகும். ஏனெனில் இன்று சிறிலங்கா பெறும் கடன் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேல் குறிப்பிட்டதை வெளிக்காட்டுமாப் போன்றே பேசியுள்ளார்.

சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு பாரிஸ் சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா "சிறிலங்கா பெறும் மொத்த உதவித் தொகையை மக்கள் தொகையால் பிரிக்கும்போது வரும் தொகையானது, அதாவது இலங்கைக் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் கிடைக்கும் வெளிநாட்டுக் கடனுதவித் தொகையானது உலகிலேயே மிக மிக அதிகமானது. வேறு எந்த நாடுகளுக்கும் இந்த அளவிற்கு உதவி கிடைப்பதில்லை" என பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில், பெருமைப்பட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு கூறுவதில் உண்மை இருக்கலாம். ஆனால், இதில் ரணில் விக்கிரமசிங்கா பெருமைப்பட்டுக் கொள்வதற்கு எதுவுமில்லை. மாறாக வேதனைப்படவும் வருத்தப்படும் படியாகவே பல அம்சங்கள் இருக்கின்றன.

அதாவது. ரணில் விக்கிரமசிங்கா கூறுவது போன்று சிறிலங்கா பெறும் தலாவீத உதவித் தொகை அதிகமானது என்பதை மறுவளமாகக் கூறின் இலங்கையில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் வெளிநாட்டுக்குச் செலுத்த வேண்டிய தலைக்குரிய கடனின் தொகையும் ஏனைய மூன்றாம் உலக நாடுகளுடன் ஒப்பிடும் இடத்து மிக மிக அதிகம் என்பதே பொருளாகும்.

கடந்த வருடத்திலேயே இலங்கை மக்கள்

# சிறிலங்கா அரசாங்கம் கபட நாடகம் ஆடுகிறது

## கைதியின் பெற்றோர் தெரிவிப்பு

(வடமராட்சி)

தமிழ் மக்களை எமது சகோதரர்களாகவே மதிக்கிறோம். ஆனால் இந்த விடயத்தில் சிறிலங்கா அரசாங்கம் கபட நாடகம் ஆடுகிறது.

இவ்வாறு தனது பிள்ளையைப் பார்க்க வந்து சில தினங்கள் தங்கியிருந்து விட்டு நேற்றுமுன்தினம்திரும்பிச்செல்லும்உடகேடயஸ் சில்வா பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; விடுதலைப் புலிகளை ஒழிப்பதாகக் கூறி அப்பாவிப் பொதுமக்களின் வதிவிடங்கள் சொத்துக்களை சிறிலங்கா அரசு அழித்திருக்கிறது. இது அரசின் மனிதாபிமானமற்ற ஒரு கொடூரச் செயல் என்றே சொல்லவேண்டும்.

எங்கள் பிள்ளைகளை விடுதலைப் புலிகள் தங்கள் பிள்ளைகள் போல் பராமரித்துள்ளனர். நாங்கள் என்றும் இவ் இயக்கத்தினருக்கு நன்றி உள்ளவர்களாக இருப்போம்.

யுத்தக் கைதிகள் விடுவிப்பு விவகாரத்தில் விடுதலைப் புலிகள் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டனர். விடுதலைப் புலிகள் கண்ணியமானவர்கள்; நேர்மையானவர்கள். தமது சுதந்திரத்திற்காகப் போராடுகிறார்கள். இதனை அரசாங்கம் தென்பகுதிகளில் மாசுபடுத்துகிறது. இங்கு வந்து உண்மைகளை அறிந்துகொண்ட நான் சிங்கள மக்களுக்கு தெரியவைப்பேன்.

எனது பிள்ளைகளைப் பார்த்ததும் இழந்துவிட்டபெருமதிப்புள்ள பொருளை மீண்டும் பெற்றுவிட்டது போன்ற உணர்வு உண்டாகிறது என்றார்.

"எனது மகனைப் பார்ப்பதற்கு வந்திருந்த எனக்கு விடுதலைப் புலிகளின் வரவேற்புக்கள் மிகவும் நன்றாக இருந்தது."

இவ்வாறு, யுத்தக் கைதிகளைப் பார்ப்பதற்கு வந்திருந்தவர்களில் ஒருவரான அத்தனகல்லவைச் சேர்ந்த திரு. குணசேகர (வயது 65) எமது செய்தியாளருக்கு பருத்தித்துறையில் வைத்து வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

(30) (யோ)

## சுச்சரித்தவில் கைப்பற்றிய பணம் குறித்து சர்ச்சை

(கொழும்பு)

கொலையுண்ட முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் சுச்சரித்த இல்லத்தில் கைப்பற்றப்பட்ட 78 மில்லியன் ரூபா பற்றிப் பாராளுமன்றத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. நிகால் சிறிபால டி சில்வா கேள்வி கேட்டார்.

சம்பந்தப்பட்ட தொகை பிரேமதாசாவின் இல்லத்தில் இருந்ததை மறுத்தோ அல்லது உறுதிப்படுத்தியோ பாராளுமன்றத்தில் பதில் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் இக்கேள்வியின் போது இடையிடையே அரசதரப்பிலிருந்து குறுக்கீடுகள் ஏற்பட்டன. குறுக்கீடுகள் தொடருமானால் உறுப்பினர்களை வெளியேற்றப்போவதாக அப்போது சபாநாயகரின் கடமைகளை நிறைவேற்றிய குழுக்களின் பிரதித் தலைவர் எச்சரித்தார்.

இவ்வளவு பெருந்தொகைப் பணம் ஒரு சாதாரண வீட்டில் கைப்பற்றப்பட்டால் வருமான வரி திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கும் என்றும் டி சில்வா தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட தொகைப் பணத்தை விட மேலும் அதிக மான தொகைப்பணம் சுச்சரித்த இல்லத்தில் கண்டெடுக்கப்பட்டதாகக் கொழும்பில் சிலபத்திரிகைகள் செய்திவெளியிட்டுள்ளன.

பிரேமா கொலைக்கு பொறுப்பேற்று

## பொலிஸ் மாஅதிபர் பதவி துறக்க வேண்டும்

### ஐ. தே. க. உறுப்பினர் தெரிவிப்பு

[கொழும்பு]

பொலிஸ் மா அதிபர் தமது பதவியை துறப்பதே நல்லது என கொழும்பு மாவட்ட ஐ. தே. க. எம். பி. ஹட்சன் சமரசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் பெண்கள் தங்க நகைகளுடன் சுதந்திரமாக நடமாடமுடியும் என்றெல்லாம் பொலிஸ் அதிகாரிகள் மறைந்த ஜனாதிபதிக்கு தவறான அறிக்கைகளை கொடுத்தனர். இறுதியில் ஜனாதிபதியே பட்டப்பகலில் நகரில் கொலை செய்யப்பட்டார் என ஹட்சன் கூறினார்.

ஜனாதிபதி பிரேமதாசா, லலித் முதலியோர் கொழும்பில் தான் படுகொலை செய்யப்பட்டனர், இச் சம்பவங்களுக்கு பின் பொலிஸ் மாஅதிபர் இராஜினாமா செய்வதே சிறந்தது என்று ஹட்சன் சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

## 'கம் உதாவ' கண்காட்சி இம்முறை இல்லை

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் 69-வது பிறந்த தினம் இன்று ஆகும்.

வழமையாக ஜனாதிபதியின் பிறந்த தினத்தன்று மறைந்த ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் முகமாக இன்றுமட்டும் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்துவைக்கப் படும் என்று அறிவிக்கப்பட்

## விமான நிலையத்தில் அநாமதேய கார்

கட்டுநாயக்காவில் பீதி

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் கார் தரிப்பிடத்தில் பழையரக பேர்ஜோ கார் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை முதல் அநாதரவாக நின்றதையடுத்து விமானநிலையத்தில் ஞாயிறன்று பெரும் பீதி நிலவியது.

உடனடியாக வெடிகுண்டு அகற்றும் பொலிஸ் குழு ஸ்தலத்திற்கு வந்து காரை பரிசோதித்ததில் அதில் எந்த சந்தேகத்திற்கு இடமான பொருள்களும் இல்லாததை உணர்ந்தனர். இதைத்தொடர்ந்து அக்கார் கட்டுநாயக்கா பொலிஸ் நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டது. காரின் உரிமையாளரை கண்டறியும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

அராலித்துறை குண்டுவெடிப்பு

## வெடிகுண்டு நிபுணர் லண்டனில் சாட்சியம்

ஜெனரல் கொப்பேகடுவ உட்பட 10 படை அதிகாரிகள் பலியான அராலித்துறை குண்டு வெடிப்பு தொடர்பான சர்வதேச விசாரணைக் குழு கடந்த வாரம் நான்கு

இந்த விசாரணை மன்றம் கூடியது.

முக்கிய சாட்சிகளில் ஒருவரான வெடிகுண்டு நிபுணர் ஜோன் ஆர். வயட் ஆணைக் குழு முன் சாட்சியம் அளித்

பிரதிப் பொலிஸ் மாஅதிபர்

## லோறன்சிற்கு எதிராக ஐ.தே. க எம். பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஏ. ஜி. லோறன்ஸுக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் கொழும்பு (ஐ.தே.க) பாராளுமன்ற உறுப்பினர் ஹட்சன் சமரசிங்கா தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்கு ஏ. ஜி. லோறன்ஸ் மறுப்புத் தெரிவித்திருக்கிறார். அவர் தன மறுப்பை சபாநாயகர் எம். எச். முகமத்திடம் தெரிவித்துள்ளார்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்தசமயம் தனக்கு ஏ.ஜி. லோறன்ஸ் பல தொல்லைகள் தந்ததாக ஹட்சன் சமரசிங்கா பாராளுமன்றத்தில் பேசியிருந்தார். தன்னைக் கொலைசெய்ய முயற்சித்தவருக்கும், மற்றொருவருக்கும் லோறன்ஸ் துப்பாக்கி அனுமதிப் பத்திரம் வழங்கியதாகவும் சமரசிங்கா குற்றம்சாட்டியிருந்தார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் பொலிஸ் படையைவிட்டு விலகியதிலிருந்து தனக்கும், துப்பாக்கி அனுமதிப் பத்திரத்திற்கும் சம்பந்தமில்லை என்று கூறும் அவர், இப்போது மற்றவர்களி குற்றங்கள் தன்மேல் சுமத்தப்படுவதாகவும், பாராளுமன்றத்திலும், வெளியிலும் தொடர்புச் சாதனங்களும் தன்னைத் தாக்குவதாகவும், மற்றவர்களின் குற்றத்திற்காக அடிபடும் மனிதனாகத் தான் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

### அனைவருக்கும் எயிட்ஸ் சோதனை

[கொழும்பு]

இலங்கையிலுள்ள அனைவரையும் எயிட்ஸ் நோய் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனக்கோரும் பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளது. ஐ. தே. க. எம். பி. ஒருவர் இந்த பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

பெண்வேடமிட்டு

## கனடா செல்லமுயன்ற இளைஞர் கைது

[கொழும்பு]

பெண்போல் சேலை, நகைகள் அணிந்து கனடா செல்ல முயற்சி செய்த தமிழ் இளைஞரைகொழும்புகட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சிறிலங்கா பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்தனதுஉதட்டுக்குசாயம் பூசியும், ஆபரணங்களை அணிந்தும், ஒரு பெண்ணைப் போல் நடித்தும், கே.எல்.எம். டச் விமானத்தில் ஆம்ஸ்ரடாம் வழியாகக் கனடாவுக்கு செல்லவிருந்தார். இவரின் கடவுச் சீட்டிலுள்ள புகைப் படத்திலும் இளம் பெண்ணைப்போல உடையணிந்து காணப்பட்டார். இவர் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

## சிறுமி காயம்

திருமண வைபவத்தில் பயணிகளை ஏற்றி வந்த பஸ் ஒன்றுபாடசாலைமாணவியை மோதியது. இதனால் அச் சிறுமியின் இடதுகால் சேதமுற்ற நிலையில் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை எரிஞ்சம்மன் கோவிலடியில் வசிக்கும் பேரின்பம் குமுதினி (வயது 12) என்னும் சிறுமியே காயமடைந்தவராவார்.

இதுபற்றி ஸ்தலத் திற்கு

கும் இந்த அளவிற்கு உதவி கிடைப்பதில்லை'' என பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில், பெருமைப்பட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு கூறுவதில் உண்மை இருக்கலாம். ஆனால், இதில் ரணில் விக்கிரமசிங்கா பெருமைப்பட்டுக் கொள்வதற்கு எதுவுமில்லை. மாறாக வேதனைப்படவும் வருத்தப்படும் படியாகவே பல அம்சங்கள் இருக்கின்றன.

அதாவது. ரணில் விக்கிரமசிங்கா கூறுவது போன்று சிறிலங்கா பெறும் தலாவீத உதவித் தொகை அதிகமானது என்பதை மறுவளமாகக் கூறின் இலங்கையில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் வெளிநாட்டுக்குச் செலுத்த வேண்டிய தலைக்குரிய கடனின் தொகையும் ஏனைய மூன்றாம் உலக நாடுகளுடன் ஒப்பிடும் இடத்து மிக மிக அதிகம் என்பதே பொருளாகும்.

கடந்த வருடத்திலேயே இலங்கை மக்கள் ஒவ்வொருவரும் தலா 2,22 000 ரூபாவை கடனாக வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டியிருந்ததாக வரவு செலவு திட்ட உரையில் பேசிய எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் தெரிவித்தார். அதாவது இலங்கையில் பிறக்கும் ஒவ்வொரு சிசுவும் தனியாக வாயுயுடனும், வயிற்றுடனும் பிறக்கவில்லை. 2,22,000 ரூபா கடனுடனும் பிறக்கின்றது. இவ்வாறாக இலங்கையர் ஒவ்வொரு தலையிலும் மீள முடியாத கடன் சுமை ஏற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள மக்களின் தலையில் இப்பெரும் கடன் சுமையை ஏற்றியதன் பெரும்பங்கை 1977ஆம் ஆண்டிற்குப் பின் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கங்களே பொறுப்பேற்க வேண்டும். 'திறந்த பொருளாதாரக் கொள்கை' என ஆரம்பிக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையானது, கடந்த 15 வருட காலத்தில் படிப்படியாக மாற்றமடைந்து இன்று வெளிநாட்டு முதலீட்டாளர்களிற்கும், உதவிவழங்கும் நாடுகள் / நிறுவனங்கள் என்பனவற்றின் பொருளாதாரக் கொள்கைக்கமைவாக மாற்றமடைந்துள்ளது.

அதாவது. கடந்த பல ஆண்டுகளாக உதவிவழங்கும் வெளிநாடுகளினதும், நிறுவனங்களினதும் சிபார்சுகளை தொடர்ச்சியாக செயற்படுத்திவந்ததினால், ''ஆசியாவிலேயே தனியார் மயமாக்கலில் முன்னணி வகிக்கும் நாடு என்ற 'பெருமையை' சிறிலங்கா பெறமுடிந்தது.'' இதன் படிமுறை வளர்ச்சியானது. இன்று. இலவச பாடநூல், மதிய உணவு, சீருடை போன்றவற்றிற்கான மானியங்களை வெட்டுவது குறித்து அரசாங்கம் ஆலோசனை நடத்த வேண்டிய நிலையை அரசிற்கு ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், சிறிலங்கா அரசாங்கமோ, ரணில் விக்கிரமசிங்காவோ, உலக நாடுகளிடம் கையேந்தி பெறும் உதவியில் பெருமைப்பட்டுக் கொள்வதற்கு என்ன இருக்கின்றது? வருடா வருடம் பாரிஸில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ளபோதெல்லாம். உதவி வழங்குபவர்களின் நிபந்தனைக்குக் கீழ்ப்படிந்து கைகட்டி வாய் பொத்தி நின்று பெறும் கடனில் பெருமிதம் கொள்ள எது இருக்கிறது?

## பதவி துறக்க வேண்டும்

### ஐ. தே. க. உறுப்பினர் தெரிவிப்பு

[கொழும்பு]

பொலிஸ் மா அதிபர் தமது பதவியை துறப்பதே நல்லது என கொழும்பு மாவட்ட ஐ. தே. க. எம். பி. ஹட்சன் சமரசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் பெண்கள் தங்க நகைகளுடன் சுதந்திரமாக நடமாடமுடியும் என்றெல்லாம் பொலிஸ் அதிகாரிகள் மறைந்த ஜனாதிபதிக்கு தவறான அறிக்கைகளை கொடுத்தனர். இறுதியில் ஜனாதிபதியே பட்டப்பகலில் நகரில் கொலை செய்யப்பட்டார் என ஹட்சன் கூறினார்.

ஜனாதிபதி பிரேமதாசா, லலித் முதலியோர் கொழும்பில் தான் படுகொலை செய்யப்பட்டனர், இச் சம்பவங்களுக்கு பின் பொலிஸ் மா அதிபர் இராஜினாமா செய்வதே சிறந்தது என்று ஹட்சன் சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

## 'கம் உதாவ' கண்காட்சி இம்முறை இல்லை

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் 69-வது பிறந்த தினம் இன்று ஆகும்.

வழமையாக ஜனாதிபதியின் பிறந்த தினத்தன்று கோலாகலத்துடன் திறக்கப்படும் கம் உதாவ கண்காட்சி, மறைந்த ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் முகமாக இன்றுமட்டும் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்துவைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கண்காட்சி நடைபெறாது.

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் கார் தரிப்பிடத்தில் பழையரக பேர்ஜோ கார் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை முதல் அநாதரவாக நின்றதையடுத்து விமானநிலையத்தில் ஞாயிறன்று பெரும் பீதி நிலவியது.

உடனடியாக வெடிகுண்டு அகற்றும் பொலிஸ் குழு ஸ்தலத்திற்கு வந்து காரை பரிசோதித்ததில் அதில் எந்த சந்தேகத்திற்கு இடமான பொருள்களும் இல்லாததை உணர்ந்தனர். இதைத்தொடர்ந்து அக்கார் கட்டுநாயக்கா பொலிஸ் நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டது. காரின் உரிமையாளரை கண்டறியும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

அராலித்துறை குண்டுவெடிப்பு

## வெடிகுண்டு நிபுணர் லண்டனில் சாட்சியம்

ஜெனரல் கொப்பேகடுவ உட்பட 10 படை அதிகாரிகள் பலியான அராலித்துறை குண்டு வெடிப்பு தொடர்பான சர்வதேச விசாரணைக் குழு கடந்த வாரம் நான்கு தினங்கள் தமது விசாரணைகளை லண்டனில் நடத்தியது. காமன்வெல்த் செயலகத்தில் இந்த விசாரணை மன்றம் கூடியது.

முக்கிய சாட்சிகளில் ஒருவரான வெடிகுண்டு நிபுணர் ஜோன் ஆர். வயட் ஆணைக் குழு முன் சாட்சியம் அளித்தார். ஆணைக்குழு தற்போது தமது இறுதி அறிக்கையை தயாரித்து வருகின்றது.

...படத்திலும் இளம் பெண்ணைப்போல உடையணிந்து காணப்பட்டார். இவர் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

## சிறுமி காயம்

திருமண வைபவத்தில் பயணிகளை ஏற்றி வந்த பஸ் ஒன்றுபாடசாலைமாணவியை மோதியது. இதனால் அச் சிறுமியின் இடதுகால் சேதமுற்ற நிலையில் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை எரிஞ்சம்மன் கோவிலடியில் வசிக்கும் பேரின்பம் குமுதினி (வயது 12) என்னும் சிறுமியே காயமடைந்தவராவார்.

இதுபற்றி ஸ்தலத்திற்கு விரைந்துவந்த பருத்தித்துறை காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

## தமிழ் அகதிகளை அனுப்பும் கடத்தல் கோஷ்டி கைது

(பேர்லின்)

சர்வதேசக் கடத்தல் கோஷ்டி ஒன்று சமீப மாதங்களில் இலங்கைத் தமிழர் சுமார் இரண்டாயிரம்பேரை ஜேர்மனிக்குள் கொண்டுவந்ததாக ஜேர்மன் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் கடத்தல் கோஷ்டி கைதாகியுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளை மாஸ்கோ விமான நிலையத்தில் பலவந்தமாக இறக்கி அங்கிருந்து செக்கோஸ்லவோக்கியா ஊடாக ஜேர்மனிக்குள் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## காங்கிரசின் புகார்கள் அத்வானி நிராகரிப்பு

[சென்னை]

பங்குச் சந்தை ஊழல் தொடர்பான பாராளுமன்றக் கூட்டுக் குழுவின் விசாரணைகளை பாரதீய ஜனதாக் கட்சி குழப்ப முயல்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை அக்கட்சியின் தலைவர் எல். கே.அத்வானி மறுத்துள்ளார். பெங்களூரில் நடைபெற்ற கட்சியின தேசிய செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் புதுடில்லி திரும்பும் வழியில் சென்னை வந்தார். அங்கு செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; நாடாளுமன்றத்தின் மக்களவையைக் கலைக்க வைத்து அதன் மூலம் கூட்டுப் பாராளுமன்ற விசாரணைக் குழுவை செயலிழக்க வைக்க தமது கட்சி முயல்வதாக காங்கிரஸ் கட்சி தெரிவித்துவரும் புகார்களையும் வன்மையாக நிராகரித்தார்.

அத்துடன் அயோத்தி விவகாரத்தை தமது கட்சி கைவிட்டு விட்டதாகக் கூறப்படுவதை மறுத்த எல். கே. அத்வானி முக்கிய எதிர்க்கட்சி என்ற வகையில் அனைத்து விவகாரங்களிலும் தமது கட்சி கவனம் செலுத்தும் என்றும் குறிப்பிட்டார்

## லஞ்சம் பெற்றது ராவ் மட்டுமல்ல

பங்குத்தரகர் ஹர்சத் மேத்தாவிடம் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானியும், முதலமைச்சர் ஜெயலலிதாவும் லஞ்சப்பணம் பெற்றுள்ளதாக சுப்பிரமணியம் சுவாமி குற்றஞ்சாட்டியுள்ளார். சென்னையில் செய்தியாளர்களிடையே பேசிய அவர், அத்வானி மூன்று கோடி ரூபாவும், ஜெயலலிதா ஒரு கோடி ரூபாவும் ஹர்சத் மேத்தாவிடம் இருந்து லஞ்சமாக பெற்றதாக கூறினார்.

இது குறித்து விசாரிக்க உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக்குழு ஒன்றை விரைவில் அமைக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

# கூட்டுபாராளுமன்றகுழுவின் வரம்பு காலத்தை நீடிக்கவும்

## தேசிய முன்னணி கோரிக்கை

(டில்லி)

பங்குபத்திர ஊழல்குறித்து விசாரணை நடத்தி வரும் கூட்டுப் பாராளுமன்றக் குழுவின் அலுவல் வரம்புக்காலம் மேலும் நீடிக்கப்பட வேண்டும் என்று இடதுசாரிக் கட்சிகளும் தேசிய முன்னணியும் கோரிக்கை விடுத்துள்ளன.

புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இவற்றின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தேசிய சபைசெயலர் பாருக்கி மேலும் கூறுகையில்;

பங்குத்தரகர் ஹர்சத் மேத்தா அரசியல் தலைவர்களுக்கு பணம் கொடுத்ததாகக் கூறப்படும் புகார்கள் குறித்து விசாரித்துஉண்மையைவெளிக் கொணர வேண்டியது அவசியமானதாகும். சுமார் 5000 கோடி ரூபாய் ஊழலோடு சம்பந்தப்பட்ட ஒருவர் பிரதமர் நரசிம்மராவிற்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார். எனினும்தாம் வகிக்கும் மிகஉயரிய பதவிப் பொறுப்பின் கண்ணியத்தை கருத்தில் கொண்டு இந்தக் குற்றச்சாட்டிலிருந்து வெளிப்பட வேண்டியதுதான் இங்கு மிகவும் பொருத்தமானதாகவும் உசிதமானதாகவும் இருக்கும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

## மீனவர்மீது துப்பாக்கி சூடு விசாரணை நடத்த உத்தரவு

(சென்னை)

சேலம் மாவட்டம் குளத்தூருக்கு அருகே மூன்று மீனவர்கள் சுடப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்தும்படி உத்தரவு இடப்பட்டுள்ளது. சந்தன மரக் கடத்தல்காரன் எனப்படும் வீரப்பன் குழுவைச் சேர்ந்தவர்களை தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கர்நாடக மாநில சிறப்பு அதிரடிப்படையினர் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டது தெரிந்ததே. வட்டார வருவாய்த்துறை அதிகாரி தலைமையில் இதற்கான விசாரணை நடத்தப்படவுள்ளது.

காயமுற்றவர்களில் இருவர் தாங்கள் வீரப்பன் குழுவினருடன் சேர்ந்தவர்களல்ல எனவும், மீனவர்கள் எனவும் கூறியுள்ளனர். ஆனால் கர்நாடக சிறப்பு அதிரடிப்படையினரோ இவர்கள் காட்டில் மறைந்திருந்ததாகவும் சரணடையும்படி விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்காததால் சுடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

### சந்திரலேகா ஆளுநர் சந்திப்பு

ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் திருமதி சந்திரலேகா தமிழக ஆளுநரைச் சந்தித்த போது தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டதாகவும், ஜெயலலிதா அரசை நீக்குமாறும் கோரி மனு ஒன்றை அளித்தார். சுப்பிரமணியம் சுவாமி அ.தி.மு.க. தொண்டர்களால் தாக்கப்பட்டமையும் அப்போது சுட்டிக் காட்டப்பட்டது.

### சந்தேக நபர் இலங்கையிலாம்?

நியூயோர்க்கில் கடந்த பெப்ரவரியில் உலக வர்த்தகமையத்தில் இடம்பெற்ற பெரும் கார் குண்டு வெடிப்புக்கு காரணமானவர்களில் ஒருவர் இலங்கையில் தலைமறைவாக இருக்கலாம் என மத்திய புலனாய்வுத்துறை சந்தேகம் தெரிவித்துள்ளது.

நியூயோர்க் குண்டு வெடிப்பில் ஆறு அமெரிக்க பொது மக்கள் பலியானமை தெரிந்ததே.

முல்லைத்தீவு மக்கள்வங்கி வாடிக்கையாளர்

## முகவரியைத் தெரியப்படுத்த முகாமையாளர் கோரிக்கை

இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து கடந்த 3 வருட காலமாக செயலற்றிருந்த மக்கள் வங்கி முல்லைத்தீவு கிளை கடந்த 16 ஆம் திகதியில் புதுக்குடியிருப்பு ப. நோ. கூ. சங்க கட்டடத்தில் முல்லை. அரச அதிபரால் திறந்து வைக்கப்பட்டது. இதன் கிளை முகாமையாளர் திரு. எஸ். சேனாதிராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தின் போது அரச அதிபர் திரு. ஆர். தருமகுலசிங்கம், மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர் திரு. இ. அருளானந்தன், கொத்தணி அதிபர் உட்பட பலர் உரையாற்றினர். அரச திணைக்கள உயர் அதிகாரிகள், சமயப் பெரியார்கள், வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் இத் திறப்பு விழாவில் சமுகமளித்திருந்தனர். இவ் வைபவத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் கிளை ஊழியர் திரு. எஸ். கிருஷ்ணானந்தன் அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இவ் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் இடம்பெயர்ந்திருப்பின் தமது தற்போதைய முகவரியைத் தெரியப்படுத்துமாறு கிளை முகாமையாளர் கேட்டுள்ளார்.

## மாவட்ட மட்டத்தில் கராத்தே போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் மாபெரும் கராத்தே போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. 16 வயதுக்குட்பட்டவர்கள், 19 வயதுக்குட்பட்டவர்கள், 19 வயதுக்கு மேல் 55 கிலோ எடைக்குட்பட்டவர்கள், 19 வயதுக்குமேல் 55 கிலோ எடைக்கு மேற்பட்டவர்கள் என நான்கு பிரிவுகளாக ஒவ்வொரு பட்டிகளுக்கும் போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டிகள் வட்ட மட்டங்களில் நடைபெற்று தெரிவு செய்யப்பட்டவர்கள் இறுதியாக மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றுவார்கள். தனிநபர் போட்டி, குழுப்போட்டி (3 பேர்), காட்டா போட்டி ஆகியன நடைபெறவுள்ளன.

போட்டிகளுக்கான விண்ணப்பப் பத்திரங்களை கராத்தே பயிற்றுனர்களிடமும், கோண்டாவில் மாவட்டச் செயலகத்திலும் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்ப முடிவு திகதி 15 - 07 - 1993 கராத்தே பயிற்றுனர்கள் தங்களுக்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளாகும்

# வெளிநாட்டவர்களுக்கு ஜேர்மனியில் நஷ்ட ஈடு

(பொன்)

குறைந்தது மூன்று வருடங்கள் ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டவர்கள் வன்முறைத் தாக்குதல்களுக்கு ஆளாகினால் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்க ஜேர்மன் அரசு தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டவர்கள் தாக்கப்பட்டால் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் வகையில் நஷ்டஈடு சம்பந்தமான கூட்டத்தில் பொன் பாராளுமன்றம் திருத்தம் செய்துள்ளது.

1990 ஜூலைமுதல் ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டவர்கள் வன்முறைத் தாக்குதல்களுக்கு உள்ளாகியிருந்தால் இச் சட்டத் திருத்தத்தின் பிரகாரம் நஷ்டஈடு பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் சமீப மாதங்களில் புதிய நாஜிகளின் வன்முறைத் தாக்குதல்களுக்கு ஆளாகிய துருக்கியர்களும், ஏனைய வெளிநாட்டவரும் நன்மை பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், மூன்று வருடங்களுக்குக் குறைவாக ஜேர்மனியில் வாழ்பவர்களும், உல்லாசப் பயணிகளும், ஜேர்மனிக்கு விஜயத்தை மேற்கொள்பவர்களும் தாக்குதல்களுக்கு உள்ளாகினால் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

## கிழக்கில் படையினர் மனித உரிமை மீறல்

மன்னிப்புச்சபை கண்டனம்

கிழக்கு மாகாணத்தில் பாரதூரமான மனித உரிமைமீறல்கள் தொடர்வதாக சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கை ஒன்று கூறுகிறது. 1992இல் பெருமளவில் காணாமற்போனவர்களுடன் இரகசியமாக பலர் படையினரால் தடுத்தும் வைக்கப்பட்டுள்ளனர். கைதிகள் மோசமாக நடத்தப்படுவது சர்வதேச மன்னிப்புச்சபையை குழப்பமடையச் செய்துள்ளது இதை தடுத்து நிறுத்த அதிகாரிகள் உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

விசாரணையின்றி பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்தும் அரசை மன்னிப்புச் சபை கண்டித்துள்ளது. படையினர் சுற்றிவளைப்பில் கைது செய்யும் ஆட்களுக்கு அவர்கள் கைதானதற்கான உறுதி பத்திரம் வழங்குவதில்லை எனவும் அவ்வமைப்பு கண்டித்துள்ளது.

விசாரணையிலுள்ள சம்பவம் குறித்து

## பத்திரிகையாளருக்கு தெரியப்படுத்தக்கூடாது

(கொழும்பு)

விசாரணையிலுள்ள குற்றச் சம்பவங்களைப் பற்றி பத்திரிகையாளர் மகாநாடுகளில் சமுகம்கொடுத்து எதுவும் பேசக்கூடாது என்று ஜனாதிபதி செயலகம் பொலிஸ் உயர் அதிகாரிகளைப் பணித்துள்ளது.

'பத்திரிகைகளுக்குச் செய்தி வழங்குதல் மேற்கொள்ளப்படும் விசாரணைக்குத் தடையாக அமைந்து விடலாம் என்றும் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலைப் புலிகள் எம்மை நன்றாகவே கவனித்தனர்

விடுவிக்கப்பட்டவர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் எம்மை மிக நன்றாகவே கவனித்தார்கள். புலிகள் உறுப்பினர்கள் எவரும் எம்மீது சீற்றம் கொள்வதில்லை. நல்லமுறையிலேயே நடந்துகொண்டனர் என நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவரான சரத் குமார கொழும்பில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## விளக்கவுரை

இன்று பிற்பகல் 2.00 மணியளவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி அதன் பிரதிநிதியின் விளக்கவுரையும், படக்காட்சியும் செயலக கேட்போர் மன்றில் இடம்பெறும். அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் இவர்களது செயற்பாட்டுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

## வந்தனர்

அரச சார்பற்ற கெயர் நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் நேற்று காலை 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் சிறுவர் பராமரிப்பு நிதியத்தின் வாகன மூலம் யாழ். வந்துசேர்ந்தனர். (யோ)

கொழும்பிலுள்ள

## செஞ்சிலுவையலுவலகத்தில் பெருமளவு மக்கள் குழுமினர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட ஐந்து யுத்தக் கைதிகளையும் பார்வையிடுவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கொழும்பு அலுவலகத்தில் பெருமளவு மக்களும், பத்திரிகையாளரும் குழுமியிருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மலர் வெளியீடு

சிறிலங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் மாணவர் மன்றத்தால் இன்று காலை 9-00 மணியளவில் மக்கள் மருத்துவன் என்னும் மலர் வெளியீடும், முன்னாள் கல்லூரி அதிபர் வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி அவர்களின் உருவப்படத்திரை நீக்கமும் நடைபெறவுள்ளன.

மக்கள் வங்கியின்

## பிரதான வீதிக்கிளை மீள இயங்க ஆரம்பித்தது

"1990 ஆனி மாத பிற்பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையின்போது மக்கள் வங்கி யாழ். பிரதான வீதி கிளை கட்டடம் சேதமுற்றமையினால் இக்கிளையின் நடவடிக்கைகள் யாழ். ஸ்ரான்லி வீதி கிளை கட்டடத்தில் நடைபெற்றுவந்தன. தற்பொழுது மேற்படி கிளை கட்டடம் திருத்தியமைக்கப்பட்டு கடந்த திங்கள் முதல் இக்கிளை மீளவும் செயற்படத் தொடங்கியுள்ளது. இக்கிளை செயல்பட ஆரம்பித்த வைபவத்தின்போது கிளை முகாமையாளர் திரு. சி. ஆனந்தலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன், யாழ். ப. நோ. கூ. சங்க தலைவர் திரு. எஸ். சிறில், யாழ். மாவட்ட கூட்டுறவு சபை செயலாளர் திரு. சு. சுப்பிரமணியம் ஆகியோர் கூட்டுறவு துறையில் வங்கியின் அளப்பரிய சேவை பற்றி உரையாற்றினர் மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர் திரு. இ. அருளானந்தன் அவர்கள் தமது உரையின்போது தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் எமது அபிவிருத்தித் திட்டங்களின் அவசியம் பற்றியும், அரச சார்பற்ற நிறுவனங்கள் சுயதொழில் முயற்சி

## நிர்வாகிகள் தெரிவு

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடி சனசமூக நிலைய புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. நிலைய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர் ந. கிரிதரன், உப தலைவர் தி. கதிர்காமநாதன், செயலாளர் ந. பஞ்சலிங்கம், உப செயலாளர் வா. வரதராஜன், பொருளாளர் பொ. சுதாகரன், உப பொருளாளர் அ. சிவாகரன், சமய பகுதி தலைவர் லி. கேதீஸ்வரன், விளையாட்டுப்பகுதி தலைவர் க. திருக்குமரன், கலைபண்பாட்டு

தடை நீங்கிய

பெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மண்ணெண்ணெய் தவிர மற்றப் பொருள்கள் பொருளாதாரத்தடை ஏற்படுவதற்கு முன்பு மாதமொன்றுக்கு பாவிக்கப்பட்ட அளவை தரும்படியும் மின்சாரம் தற்போது இல்லாததால் அதற்கேற்றவாறு தேவையான அளவு மண்ணெண்ணெயின் அளவைத் தரும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

(சி)

ராணுவ

பாதுகாப்பு அதிகாரிகளின்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 23-6-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10006


வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-5662, 28-0732, 40-2295, 27-5197, 28-3429,
27-7750, 27-5058, 42-1721, 26-5846, 27-5799,
27-6579, 24-2680, 26-0525, 28-1176, 41-1227,
24-4238, 41-9111, 26-2108, 26-6526, 41-7297,
23-0425, 24-3071, 28-5484, 24-4504, 41-9396,
40-2394, 26-0423, 22-4766, 24-9830, 24-0878,
24-9337, 24-5416, 26-2299, 27-6063, 22-3641,
28-1706, 42-2151, 26-8223,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

## கன்னி ஆண்டின் கண்ணீர்ப் பூக்கள்

அன்னையின் அணைப்பில்: 28 ★ 07 ★ 1975



அன்னியர் அழிப்பில்: 04 ★ 07 ★ 1992

பாலசுந்தரம் **மணிவண்ணன்** (மணி)
(வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவன்)
புளியங்கூடல்

திதி: 24-06-1993

கண்களில் கண்ணீ ராடும்
கனவிலும் உன் நினைவே தோன்றும்
எண்ணமே என்றும் உன்தன்
எழில் முகம் காண ஏங்கும்
தங்கமே தவத்தின் செல்வ
மணிவண்ணனே மன்னா
ஏங்குதே இதயம் என்றும்
இறையவன் அடியில் வாழி.

அன்புத் தாய், அக்காமார், தங்கை,
அத்தான்மார், மருமகிகள், உற்றார்,

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 23-6-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10006

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-5662, 28-0732, 40-2295, 27-5197, 28-3429,
27-7750, 27-5058, 42-1721, 26-5846, 27-5799,
27-6579, 24-2680, 26-0525, 28-1176, 41-1227,
24-4238, 41-9111, 26-2108, 26-6526, 41-7297,
23-0425, 24-3071, 28-5484, 24-4504, 41-9396,
40-2394, 26-0423, 22-4766, 24-9830, 24-0878,
24-9337, 24-5416, 26-2299, 27-6063, 22-3641,
28-1706, 42-2151, 26-8223,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-4683, 41-8557, 24-9938, 41-9876, 26-3412.
26-6398, 28-1901, 26-5848, 26-7663, 26-7540,
26-3177, 27-4162, 24-4875. 27-3946, 28-3029,
26-3318, 26-8497, 26-7217, 24-5140, 42-3239,
26-0536

# மரண அறிவித்தல்

## நாகமுத்து யோகேஸ்வரி

கைதடிப் பிரிவு குடும்ப நல உத்தியோகத்தர் நாகமுத்து யோகேஸ்வரி அவர்கள் காலமாகிவிட்டார். இவர் நாகமுத்து முத்துப்பிள்ளையின் சிரேஷ்ட மகளும், யோகேஸ்வரன் (அயோத்தி), இரத்தினேஸ்வரி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), ஜெகதீஸ்வரி, இராஜேஸ்வரி, இலங்கேஸ்வரி, ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல் 10 மணியளவில் ஊற்றல் மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. இரத்தினேஸ்வரி
(சகோதரி)

அம்மன் கோவிலடி,
கைதடி, கிழக்கு. (5201)

செயல்பட ஆரம்பித்த வைபவத்தின்போது கிளை முகாமையாளர் திரு. சி. ஆனந்தலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன், யாழ். ப. நோ. கூ, சங்க தலைவர் திரு. எஸ். சிறில், யாழ். மாவட்ட கூட்டுறவு சபை செயலாளர் திரு. சு. சுப்பிரமணியம் ஆகியோர் கூட்டுறவு துறையில் வங்கியின் அளப்பரிய சேவை பற்றி உரையாற்றினர் மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர் திரு. இ. அருளானந்தன் அவர்கள் தமது உரையின்போது தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் எமது அபிவிருத்தித் திட்டங்களின் அவசியம் பற்றியும், அரச சார்பற்ற நிறுவனங்கள் சுயதொழில் முயற்சியாளர்கள் பங்களிப்புபற்றியும் விபரமாக எடுத்துக் கூறினார்.

இத்திறப்பு விழாவில் மதக் குருக்கள், அரச திணைக்கள அதிகாரிகள், கூட்டுறவு துறையினர், வாடிக்கையாளர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர். இவ் வைபவத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் கிளை உத்தியோகத்தர் திரு. எஸ். கென்றி அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இக்கிளை யாழ். பிரதான வீதி, சுண்டுக்குளி, குருநகர், கொழும்புத்துறை, அரியாலை பகுதிகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளதும், இப்பகுதி மக்கள் இவ் வங்கி மூலம் பல நன்மைகளைப் பெறவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மெய்வல்லுநர் போட்டி

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை வருடாநத இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

# நிர்வாகிகள் தெரிவு

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடி சனசமூக நிலைய புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. நிலைய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர் ந. கிரிதரன், உப தலைவர் தி. கதிர்காமநாதன், செயலாளர் ந. பஞ்சலிங்கம், உப செயலாளர் வா. வரதராஜன், பொருளாளர் பொ. சுதாகரன், உப பொருளாளர் அ. சிவாகரன், சமய பகுதி தலைவர் வி. கேதீஸ்வரன், விளையாட்டுப்பகுதி தலைவர் க. திருக்குமரன், கலைபண்பாட்டு பிரிவு தலைவர் பே. சுகிலன், விவசாய பகுதி தலைவர் சி. திருநாவுக்கரசு, சுகாதார பகுதி தலைவர் ச. குகனேசன், கணக்காய்வுப் பரிசோதகர் த. பத்மநாதன், நிலைய பொறுப்பாளர் பே. சுகிலன்.

## இந்திய

(வயது 10) எனும் சிறுவன் எறிகணையை கல்லில் குத்த முயன்றான். அருகிலிருந்த சிறுவர்கள், ''ஐயோ வெடிக்கப்போகிறது'' என தடுத்துக் கூறியும் அச்சிறுவன் கல்லில் எறிகணையை எறிந்துவிட்டு கையை கட்டிக்கொண்டு நின்ற சமயம், எறிகணை வெடித்தது. தெய்வாதீனமாக அருகிலிருந்த சிறுவர்கள் ஓடிவிட்டதனால், மேற்படி சிறுவன் மாத்திரம் படுகாயமடைந்தான். பின்னர் இவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக அழைத்துச் செல்லப்பட்டு நேற்றிரவு அங்கு மரணமானார். (11)

அவர்களின் உருவப்படத்திறை நீக்கமும் நடைபெறவுள்ளன.

## தடை நீங்கிய

பெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மண்ணெண்ணெய் தவிர மற்றப் பொருள்கள் பொருளாதாரத்தடை ஏற்படுவதற்கு முன்பு மாதமொன்றுக்கு பாவிக்கப்பட்ட அளவை தரும்படியும் மின்சாரம் தற்போது இல்லாததால் அதற்கேற்றவாறு தேவையான அளவு மண்ணெண்ணெயின் அளவைத் தரும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

(சி)

## ராணுவ

பாதுகாப்பு அதிகாரிகளின் உயர்மட்ட மாநாடு ஒன்று நடத்தப்பட்டுள்ளதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

அரசாங்கம் ஏனைய பொருள்களினதும் தடையை நீக்கிவிடக்கூடும் எனவும் அவ்வதிகாரிகள் கருத்துத்தெரிவித்துள்ளனராம்.

## புலிகள்

வெளியிட்டது.

யுத்தக் கைதிகளை விடுவிக்கும் விஷயத்தில் புலிகளின் நிபந்தனைக்கு அரசு பணிந்துவிட்டது என்று மேலும் தெரிவித்தது.

செஞ்சிலுவைக் குழுவின் உதவியுடன் அவசர அவசரமாகப் புலிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின்போது, யுத்தக் கைதிகளுக்குப் பதிலாகப் பொருளாதாரத் தடையை நீக்கும் புலிகளின் நிபந்தனைக்கு அரசு விட்டுக்கொடுத்துவிட்டது என்றும் ஜெர்மன் வானொலி கொழும்புச் செய்தியாளர் லூர்சியன் ராஜகர்ணா தெரிவிக்கிறார்.

07 ★ 1975



07 ★ 1992

பாலசுந்தரம் **மணிவண்ணன்** (மணி)
(வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவன்)
புளியங்கூடல்


திதி: 24-06-1993

கண்களில் கண்ணீ ராடும்
கனவிலும் உன் நினைவே தோன்றும்
எண்ணமே என்றும் உன்தன்
எழில் முகம் காண ஏங்கும்
தங்கமே தவத்தின் செல்வ
மணிவண்ணனே மன்னா
ஏங்குதே இதயம் என்றும்
இறையவன் அடியில் வாழி.

அன்புத் தாய், அக்காமார், தங்கை,
அத்தான்மார், மருமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.
தகவல்: T. தனேந்திரன்

91, சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (5202)

# 43-ம் நாள் நினைவலைகள்



அமரர்
**குலசிங்கம் சிவகுமார்** (அமைச்சர்)
(கரணவாய் கிழக்கு, கரவெட்டி)
[இறுதியாண்டு பௌதிகவிஞ்ஞானப்பிரிவு மாணவன்]

அன்னை மடியில் 10. 06. 1967
ஆண்டவன் திருவடியில் 14. 05. 1993

நண்பனின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன், என்றென்றும் அவரது பசுமையான அந்த வளாக நினைவுகளுடன் வாழும்

—சக மாணவர்கள்.
[3ஆம் வருடம் பௌதிக விஞ்ஞானப்பிரிவு
யாழ் பல்கலைக்கழகம்.
(5200)


நாளை மகத்தான ஆரம்பம்

திருமறைக் கலாமன்றத்தின் **இலக்கிய விழா**

1993 ஜூன் 25, 26, 27

✽ பேராசிரியர்கள் ✽ விரிவுரையாளர்கள் ✽ கவிஞர்கள் ✽ கதாசிரியர்கள் ✽ சொல்லேர் உழவர்கள்

உங்களோடு பேசுகிறார்கள்.

தினமும்

★ நாதஸ்வர இசை
★ நடனம்
★ நாடகம்

இடம்: மன்ற அரங்கு

நேரம்: மாலை 5.30

(சி-6887)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.